ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1956/10 - 2016 පෙබරවාරි මස 29 වැනි සඳුදා - 2016.02.29

*1956/10 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 04 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான 2015.11.20 ஆந் திகதிய 1941/43 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயங்கள் சம்பந்தமான உத்தரவு (எச். எஸ். தலைப்பு இல. 0701.90, 0703.10.20) 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆந் திகதியின் பின் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2016, பெப்புருவரி 29.*

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| *இல.* | *எச்.எஸ். தலைப்பு* | *எச்.எஸ். குறியீடு* | *விவரணம்* | |
| *1.* | *07.01* | *0701.90* | *பிற- உருளைக்கிழங்கு* | *கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 35.00* |
| *2.* | *07.03* | *0703.10.20* | *பெரிய வெங்காயங்கள்* | *கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00* |

*3- 432*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*